**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 567** **நாள் : 11.10.2026**

**சென்னை மாவட்டத்தில் வாக்காளர் பட்டியலில் இடம் பெறாத தகுதியுள்ள வாக்காளர்கள் மற்றும் புதியதாக பதிவு செய்யவுள்ள இளம் / முதல் முறை வாக்காளர்களை பதிவு செய்வதற்காக சிறப்பு முகாம்கள் 16 சட்டமன்றத் தொகுதிகளிலுள்ள 4,079 வாக்குச்சாவடி மையங்களிலும் நேற்றும் (10.10.2026) மற்றும் இன்றும் (11.10.2026) நடைபெற்றது.**

**சென்னை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ். சமீரன், இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

சென்னை மாவட்டத்தில் வாக்காளர் பட்டியலில் இடம் பெறாத தகுதியுள்ள வாக்காளர்கள் மற்றும் புதியதாக பதிவு செய்யவுள்ள இளம் / முதல் முறை வாக்காளர்களை பதிவு செய்வதற்காக சிறப்பு முகாம்கள் 16 சட்டமன்றத் தொகுதிகளிலுள்ள 4,079 வாக்குச்சாவடி மையங்களிலும் நேற்றும் (10.10.2026) மற்றும் இன்றும் (11.10.2026) நடைபெற்றது.

இந்த சிறப்பு முகாம்களின் வாயிலாக 16 சட்டமன்றத் தொகுதிகளிலுள்ள 4,079 வாக்குச்சாவடி மையங்களில் வாக்காளர் பட்டியலில் இடம் பெறாத தகுதியுள்ள வாக்காளர்கள் மற்றும் புதியதாக பதிவு செய்யவுள்ள இளம் / முதல் முறை வாக்காளர்களுக்கு 2,517 படிவம் 6 வழங்கப்பட்டு, அதில் 1,854 படிவங்கள் பூர்த்தி செய்து பெறப்பட்டுள்ளன.

மேலும், வாக்காளர் பட்டியலில் பெயர் நீக்குதலுக்கான படிவம் 7ல் 9 வழங்கப்பட்டு, 9 படிவங்களும் பூர்த்தி செய்து பெறப்பட்டுள்ளன. திருத்தம் மேற்கொள்வதற்காக 838 வாக்காளர்களுக்கு படிவம் 8 வழங்கப்பட்டு, அதில் 620 படிவங்கள் பூர்த்தி செய்து பெறப்பட்டுள்ளன.

இந்த சிறப்பு முகாம்களின் வாயிலாக 16 சட்டமன்றத் தொகுதிகளிலுள்ள 4,079 வாக்குச்சாவடி மையங்களில் 3,364 எண்ணிக்கையிலான படிவம் 6, 7 மற்றும் 8 ஆகியவை வழங்கப்பட்டு, அதில் 2,483 எண்ணிக்கையிலான படிவங்கள் பூர்த்தி செய்து பெறப்பட்டுள்ளது.

மேற்கண்ட தகவலை, சென்னை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ். சமீரன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**